https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# கலித்தொகையில் தெய்வத் தொன்மம்

**முனைவர் இரா. சத்தியபாமா**
உதவிப்பேராசிரியர்
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
முத்துப்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டம்

**ஆய்வுச்சுருக்கம்**

தொன்மம் என்பது பழங்கதை என்று பொருள்படும். இலக்கியங்களில் பழமையான கதைகளைப் பயன்படுத்துவது அல்லது எடுத்தாள்வது தொன்மம் ஆகும். அவ்வகையில் தமிழில் சங்க இலக்கியம் தொடங்கி தற்கால இலக்கியங்கள் வரை கடவுள்கள் குறித்த பல தொன்மங்களானது புனைப்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாகக் கலித்தொகையில் பல புராணக்கதைகளான தொன்மங்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வகையில் கலித்தொகை என்னும் நூலில் சிவன், முருகப் பெருமான், திருமால் மற்றும் கொற்றவை குறித்த தொன்மங்கள் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரையின் அமைந்துள்ளது. தாருகாசுரன் என்னும் அசுரனின் மகன்களான வித்துன்மாலி, தாரகாட்சன் மற்றும் கமலாட்சன் ஆகிய மூவரையும் அழிக்கும் பொருட்டு சிவன் முப்புரத்தையும் எரித்த தொன்மத்தைப் பாலைக்கலி மூலம் அறியமுடிகிறது. முருகப் பெருமான் மாமர வடிவில் மறைந்திருந்த சூரபதுமனை அழித்த தொன்மக் கதையானது கலித்தொகையில் இடம்பெற்றிருப்பதைக் காண முடிகிறது. திருமால் மாபலி சக்கரவர்த்தியின் ஆணவத்தை அடக்கும் பொருட்டு வாமன அவதாரமாகச் சென்று மூன்றடியில் உலகை அளந்து மாபலியின் ஆணவத்தை அடக்கிய தொன்மமானது கலித்தொகையின் வழிப் புலனாகிறது. இவையன்றி கொற்றவை, திருமகள் குறித்த தொன்மங்களும் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

**முன்னுரை**

இவ்வுலகில் சமயங்கள் பல இருந்தாலும் அவற்றுள் மிகவும் பழமையான சமயமாகத் திகழ்வது இந்து சமயம்தான். இச்சமயத்தில் படைத்தல் தொழிலைச் செய்யும்

பிரம்மன், காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணு, அழித்தல் தொழிலைச் செய்யும் சிவன் ஆகிய மூவரும் முப்பெரும் தெய்வங்களாக உள்ளனர். புராணங் களும் சமயச்செல்வாக்கும் வலுவடைந்த காலகட்டத்தில் இலக்கியங்களின் போக்கு கள் அனைத்திலும் சமயங்களின் ஆதிக்கம் தலைதூக்கியது. இந்நிலையில் இந்து சமயக் கடவுள்கள் பற்றி சங்க இலக்கிய நூலான கலித்தொகை குறிப்பிடும் தெய்வங்களின் தொன்மம் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

## சிவன் பற்றிய தொன்மம்

சிவபெருமான் பிறப்பும் இறப்பும் இல்லாதவர் என்றும், மும்மூர்த்திகளை யும், தேவர்களையும், அசுரர்களையும், உலக உயிர்களையும் தோற்றுவிப்பதாக வும், பிரளய காலத்தில் அனைத்தையும் அழித்துத் தன்னுள் ஒடுக்கி சிவன் மட்டும் நிலையாக இருப்பதாக சைவ சமய இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

இந்து சமய புராணங்களிலும், இந்து தொன்மவியல் கதைகளிலும் மும்மூர்த்தி களில் அழிக்கும் கடவுளான ருத்திரனின் அம்சமாக சிவன் கருதப்படுகிறார். சிவன் என்றால் அன்பு, இன்பம், மங்களம் என்று பொருள். மங்களமாக மறைபொரு ளாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அந்தப் பரமனைக் கடல் கொஞ்சும் குமரி முதல் கைலாயப் பனிமலை வரை ஆலயங்கள் பலவற்றில் அமர்த்தி வழி பட்ட பெருமைமிக்க நமது புண்ணிய பூமியில் சிவவழிபாட்டின் சிறப்புகளை வேதங்களும், இதிகாசங்களும் மற்றும் உபநிஷதங்களும் உணர்த்துகின்றன. புராணங்களும் பகர்கின்றன. வேதங்க ளிலும் உபநிஷதங்களிலும் சிவபெருமான் 'ருத்திரன்' என்ற பெயரில் குறிப்பிடப் படுகிறார். 'ருத்திரன்' என்றால் 'துன்பங் களைத் துடைப்பவன்' என்று பொருள்.

பசுபதி, பூதபதி, பூசுநாதர் என்பன வேதங்கள் சிவபெருமானுக்குச் சுட்டும் சிறப்புப் பெயர்களாகும். சிவவழிபாட்டின் தனிநூல் சுவேதா, சுவேதர உபநிஷத்த மாகும். யஜீர் வேதத்தில் சிவனின் நூறு நாமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் சிவபெருமானை லிங்கவடிவில் வழிபடும் வழிபாடு தொடர்பாக பல புராண வழக்குகள் உள்ளன. இது குறித்து அற்புதத் திருவந்தாதி என்னும் நூலில்

**"நாமாலை சூடியும் நம்ஈசன்**
**பொன்னடிக்கே**
**பூமாலை கொண்டு புனைந்தன் பாய்"**

(அற். திருவ. பா.87)

என்று காரைக்கால் அம்மையார் குறிப்பி டுவதிலிருந்து இறைவனுக்குப் பூமாலை சூட்டிப் பாமாலையில் வணங்குகிற வழிபாடு கூறப்படுகின்றது.

சங்க காலத்தில் தெய்வம் பற்றிய வட மொழிக் கதைகள், புராணச் செய்திகள் பழைய மரபுக் கதைகளாகவும் தொன்மக் கதைகளாகவும் இடம் பெற்றுள்ளன. சிவன் முப்புரம் எரித்த தொன்மமானது வடமொழியில் வியாசர் எழுதிய பாரதத்தில் இடம்பெற்றுள்ள கர்ண பருவத்திலிருந்து புறநானூற்றில் தமிழ் வடிவம் பெற்றுள்ளது.

## சிவன் முப்புரம் எரித்த வரலாறு

இந்த புராண நிகழ்வு நடந்த இடம் திருவதிகைத் தலமாகும். தாருகாசுரன் என்கின்ற அசுரனின் மகன்களான வித்துன்மாலி, தாரகாட்சன் மற்றும் கமலாட்சன் ஆகிய மூவரும் மிகச்சிறந்த இறைப்பக்தர்கள். அவர்கள் மூவரும் பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் செய்து நினைத்த இடத்திற்கு உடனே பறந்து செல்லும் மூன்று கோட்டைகளையும், அவை மூன்றும் ஒன்றாக சங்கமிக்கும் பொழுது ஒரேயொரு அம்பினால் மட்டுமே நாங்கள் அழிய வேண்டும் என்றும் வரம் பெற்றனர்.

அவர்களின் அதிகாரம் தாங்காமல் தேவர்களும், பிரம்மனும், திருமாலும் சிவபெருமானிடம் வேண்ட மனமிறங்கிய இறைவன் அழகிய பைரவ அவதாரம்

எடுத்து தேவதச்சன் விஸ்வகர்மாவிடம் ஒரு தேர் செய்யும்படிக் கூறினார். சந்திரசூரியரே தேர்ச்சக்கரங்களாகவும், நான்கு வேதங்கள் தேரில் பூட்டிய குதிரைகளாகவும், பிரம்ம தேவரே தேரை ஓட்டும் சாரதியாகவும், மேரு மலையை வில்லாகவும், வாசுகி நாகமே வில்லைப்பூட்டும் நாணாகவும், அக்கினி அம்பின் முனையாகவும், வாயு அம்பின் வாலாகவும், திருமாலே அம்பாகவும் செய்து எடுத்துக் கொண்டு முப்புரத்தை வந்து சேர்ந்தார் சிவபெருமான். இறை பக்தியில் மிகவும் சிறந்து விளங்கக்கூடிய அசுரர்களை அழிக்க வேண்டாம் என எண்ணி பெருங்கருணை கொண்டு தமது நெற்றிக் கண்ணைத் திறந்து ஒரு பார்வை பார்க்க மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பலாயின. மூன்று அரக்கர்களும் சிவபெருமான் காலடியில் விழுந்து வணங்க இறைவனும் அவர்களை ஆட் கொண்டு தமது கோயிலின் வாயிற் காவலர்களாக இருவரையும், கோயிலில் செய்யும் குடமுழுக்கை ஏற்பவராக ஒருவரையும் ஏற்றுக்கொண்டார் என்பது தொன்மம். இத்தொன்ம நிகழ்வு குறித்து கலித்தொகை பாடலானது பின்வருமாறு குறிப்பிடுகிறது.

“தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதர் மிடல்சாய, அமரர் வந்து இரத்தலின்,
மடங்கல் போல், சினைஇ, மாயம்செய் அவுணரைக்
கடந்து அடு முன்பொடு, முக்கண்ணான் மூஎயிலும்
உடன்றக்கால், முகம் போல ஒண்கதிர் தெறுதலின்
சீறுஅருங் கணிச்சியோன் சினவலின் அவ் எயில்
ஏறுபெற்று உதிர்வன போல்”

(பாலைகலி.2:1-7)

இறைவன் உலகங்களைப் படைக்கக் கருதிய போது படைத்தல் தொழிலைச் செய்வதற்கு உரியவனாக முதலில் தோன்றிய முதியவன் அயன். அயன் முதலிய தேவர்கள் வந்து வேண்டிக் கேட்க பகைவரின் வலிமையை கெடுப்ப தற்காகச் சினந்து எமனைப் போல வஞ்சனை செய்யக்கூடிய அவுணரை எதிர்த்து நின்று போரிடக்கூடிய வலிமை யுடன் முக்கண்ணுடையசிவனார், மூன்று கோட்டைகளையும் அழிக்க கோபம் கொண்டு எழுந்தார். அப்போது அவர் முகம் சிவந்தது போல சூரியனும் சுட்டெரித்தது. சீறுதற்கரிய மழுப்படை யைத் தாங்கியவன் கோபம் கொண்ட தால் அந்த மூன்று கோட்டைகளும் அழிந்து மலைகள் வெடித்து சிதறுவது போல் சிதறின என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இந்நிகழ்வு குறித்து திருமூலர் கூறுகையில்,

“அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாருமறி யாரே”

(திரும.343)

கங்கையைத் தனது சிவந்த தலையில் சூடியவனும், எல்லாவற்றிற்கும் முதலாக வும் மூலமாகவும் இருப்பவனுமான இறைவனை முப்புரம் என்னும் இடத்தை எரித்தவன் என்று கூறுபவர்கள் மூடர்கள் என்கிறார். மேலும் அவர்களுக்கு முப்புரங்களாக இருப்பது ஆணவம், கன்மம், மாயை என்பதும் புரியவில்லை என்றும், அவற்றை இறைவன் அழிக்கி றான் என்பதையும் உணராமல் மூன்று புரங்களை எரித்ததாகக் கூறுபவர்கள் எவரும் முப்புரங்கள் எரித்த விதத்தை அறிந்தவர்கள் இல்லை என்று கூறுகிறார். இதன் மூலம் முப்புரம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்றும் இவற்றை இறைவன் அழிக்கிறான்

என்றும் கூறியுள்ளார்.

மேலும் மனோன்மணீயத்தில் சிவன் சிரித்ததால் திரிபுரம் எரிந்தது என்பதனை,

**"சிரிக்கினும் விழிக்கினும் நலமிசை தீயதே"** (மனோ.முதல் அங்கம்- மூன்றாம் களம்.103:) எனும் பாடல் வரியில் சிவன் விழித்ததால் மன்மதன் அழிந்தான், சிவன் சிரித்ததால் திரிபுரம் எரிந்தது என்பதை நம்மால் அறியமுடிகிறது.

வலிமைமிக்க பெருநகரங்களான முப்புரங்களையும் தன்னுடைய எழில் நயமிக்க அழகிய நகைப்பினால் எரித்து இந்திரன் உள்ளிட்ட தேவர்களைக் காப்பாற்றிய சிவனார் எம்மை ஆட் கொண்டபோது சிறு வீடுகளில் வசிக்கும் தனது அடியவர்களில் ஒருவரையும் விட்டுவிடாமல் தன்னுடைய அருளால் ஆட்கொண்டு தன்னுடன் சேர்த்துக் கொண்டான் என்று மாணிக்கவாசகப் பெருமான் கூறியுள்ளார். இதனை,

**"ஏற்றார் மூதூர் எழில்நகை ஏரியின்**
**வீழ்வித்து"** (திருவா.125:)

எனும் பாடல்வழி சிவபெருமான் குறித்த தொன்மத்தை அறியலாம்.

### முருகன் குறித்த தொன்மம்

'சேயோன்' என்றால் 'சிவப்பு நிறமுடையவன்' என்று பொருள். சேயோன் என்று தொல்காப்பியத்தில் முருகப்பெருமானே குறிப்பிடப்படுகிறான். 'முருகு' என்றால் 'அழகு' என்று பொருள். தமிழுக்கே ஒரு தனித்தன்மை வாய்ந்த தொன்மம் என்று குறிப்பிட்டுச் சொல்ல முருகனே வருகின்றான். காலப்போக்கில் இதிலும் வடமொழிக்கலப்பு ஏற்பட்டுவிட்டது என்றாலும் கூட முருக வழிபாடு தமிழ்நாட்டு இயற்கையுடன் கலந்த வழிபாடாகக் கருதப்பட்டு வருகிறது. இத்தகைய இறைவன் விரும்பி உறையும் இடங்கள் யாவும் இயற்கை வனப்பு மிகுந்திருக்கக்கூடிய இடங்களாகவே அமைகின்றன.

முல்லைநில மக்கள் திருமாலை வழிபடும் போது எப்படி முல்லை மலர் கொண்டு வழிபட்டனரோ அதேபோல் முருகனை வழிபடுவோர் சிவந்த மலர்களைக் கொண்டே வழிபாடு செய்து வந்தனர். கடம்பமாலையும் வெட்சிமாலையும் விரும்பி அணியக்கூடிய முருகனை வழிபட வரும் ஆடவரும் பெண்டிரும் அவனைப்போல சிவந்த மலர்களை அணிந்தே வருவர்.

திருமுருகாற்றுப்படை முருகனிடம் ஆற்றுப்படுத்த அறுபடை வீடுகளை அமைத்துக் காட்டுகிறது. இந்த அறுபடை வீடுகள் அனைத்தும் தமிழகத்தின் எல்லைக்குள்ளேயே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. முருகன் வீரத்தின் கடவுளாக சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளான். அசுரரை அழித்தது, சூரனை வென்றது, தெய்வானை கணவன் என்பது, தேவர் துயர் தீர்த்தார் என்பதும், அவனின் கொடி, மாலை, ஊர்தி போன்ற பலவும் விரிவாகப் பல தொகைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன என்பதை அறியமுடிகின்றது.

பழந்தமிழ் மக்கள் வாழ்வில் முருகன் தொன்ம நிலையில் நின்று அருளிய தாக்கம் பெரிதாகும். தலைவி காதல் கொண்ட தொடக்கத்தில் இன்புற்றும், தலைவன் பிரிவால் துன்புற்றும், உடலும் உள்ளமும் வாடிய நிலையில் அவளுடைய பெற்றோர் இன்ன காரணமென்று அறிய முடியாமல் வேலனைக் கேட்பர். அவனோ இது முருகனால் வந்துற்றது என்பான். மேலும் முருக வழிபாட்டில் வேலன் வெறியாட்டு என்கிற தொன்மம் மிகப்பெரிய செல்வாக்கு பெற்றிருந்தது என்பதனை அறிய முடிகின்றது. இத்தகைய முருகனின் சீற்றத்தை

**"காடுஉறு கடுநெறி ஆக மன்னிய**
**முருகு உடன்று கறுத்த கலிஅழி மூதூர்"**
(பதிற்.26:)

என்ற பாடல் வரிகள் சுட்டுகிறது.

முருகன் சூரபதுமன் போர்

**மாகடல் குன்றா கலக்குற மாகொன்ற மடங்காப் போர் வேலல்வலான்** (கலி.104:)

சூரபதுமன் மிகவும் கொடிய அரக்கன். இவன் மூவுலகையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தான். முனிவர்களையும் பொதுமக்களையும் துன்புறுத்தினான். அப்படி அடிமைப்படுத்தப்பட்டவர்களில் ஒருவன் ஜயந்தன். இவன் இந்திரனின் மனைவி இந்திராணியை விரட்ட அவள் பயந்து ஒளிந்து கொண்டாள். தேவர்கள் அனைவரையும் அடிமைப்படுத்தி தன் சர்வாதிகார சாம்ராஜ்ஜியத்தை விரிவு படுத்தினான். அவனை எதிர்க்க யாருக்கும் தைரியமில்லாததால் அப்பாவி களைக் காப்பதற்காக முருகனே முன் வந்தார்.

அவன் தன் தவறுக்கு வருந்துகிறானா என்பதனைச் சோதிக்க தன் தளபதி வீரபாகுவைத் தூது அனுப்பினார். அவன் பிடித்து வைத்திருப்பவர்களை விடுதலை செய்தால் சமாதானமாகப் போய்விடலாம் என்றுகூறி அனுப்பினார். ஆனால் பேச்சுவார்த்தை நடத்தப்போன வீரபாகுவைச் சூரபதுமனின் ஆட்கள் தடுத்தனர். அவன் கூற வருவதைப்பற்றி கூட கேட்காமல் அவனைத் தாக்க ஆரம்பித்தனர். தன்னைக் காத்துக் கொள்வதற்காக வீரபாகு அரக்கர்கள் சிலரை தாக்கினார். இதனால் பல அரக்கர்கள் மடிந்தனர். இருந்தும் சூரபதுமன் சிறிதும் இரங்காமல் ‘யாரை யும் விடுவிக்க முடியாது, யாரிடமும் மன்னிப்பு கேட்கவும் முடியாது’ என்று இறுமாப்புடன் கூறிவிட்டான். மேலும் ஜயந்தன் மட்டுமல்ல. இந்திரன், இந்திராணி இருவரையும் விரைவில் சிறைபிடிப்பேன் என்றும் கூறினான்.

வீரபாகு முருகனிடம் வந்து நடந்த விவரங்களைக் கூற முருகன் தன் வீரர்களோடு சூரபதுமனை எதிர்க்க விரைந்தார். முருகப்பெருமான் தூக்குணன், தருமகோபன், சண்டன் ஆகிய அரக்கர்களையும் சூரபதுமனின் மகன்களான பானுகோபன், இரணியன் ஆகியோரையும் அவன் தம்பிகளான அக்கினிமுகன், சிங்கமுகாசுரன் ஆகிய பலரையும் கொன்றார். தன்னைச் சேர்ந்தவர்களை இழந்தும் சூரபதுமனுக்கு முருகனின் பராக்கிரமம் புரியவில்லை.

இந்தப் பொடியனுடன் சண்டை போடுவது தனக்கு இழுக்கு என்று கருவம் கொண்டான். ஆனால் போகப் போக குமரனுடைய ஆற்றலைக் கண்டு சூரபதுமன் திகைத்தான். இனியும் முருகனை எதிர்ப்பது பேராபத்து எனக் கருதி மாயமாக மறைந்து போரிட்டான். தன்னிடம் இருந்த அபூர்வ சக்தியால் யார் கண்ணிற்கும் புலப்படாமல் மறைந்து போரிட்டான். சுக்கவாகப் பட்சியாக, பெரிய பூமி உருண்டையாக, மும்மூர்த்திகளாக, கூற்றுவனாக, தேவர் களாக, அசுரர்களாக, இறந்த தன் பிள்ளைகளாக, தம்பிகளாக என பலவாறு மாற்று உருவம் கொண்டு முருகனுடன் போரிட்டான். ஆனால் முருகன் சூரபதுமனின் எல்லா உருவங்களையும் அழித்தான்.

இறுதியாக சூரபதுமன் மாமரமாக மாறி கடலிலிருந்து பிரம்மாண்டமாக எழுந்து முருக வேலனை எதிர்த்தான். அவனைத் தன் முயற்சியால் மட்டும் வெல்ல முடியாது என்று தோன்றியது. உடனே சிக்கல் (தற்போது நாகப்பட்டினத்திற்கு அருகே உள்ள இடம்) என்ற தலத்திற்குச் சென்று அங்கே கோயில் கொண்டிருந்த தன் தாயான அம்பிகையிடமிருந்து ஒரு வேலைப் பெற்று வந்தார். அந்த வேலை எடுத்து சூரபதுமனை நோக்கி எறிந்தார். அது அரக்கனை இரு கூறுகளாகப் பிரித்தது. இருந்தும் அந்தக் கொடிய அரக்கனுக்கும் நற்கதி வழங்கினான் முருகப் பெருமான். முhமரமாகத் தோன்றிய அவனை இரு கூறுகளாக்கி ஒரு பகுதியை சேவற் கொடியாகவும், மற்றொரு பகுதியை மயில் வாகனமா

கவும் மாற்றித் தன்னுடனேயே அமைத்துக் கொண்டான் முருகப்பெருமான். இத்தொன்மத்தைக் கலித்தொகை பாடல டிகள் பின்வருமாறு விளக்குகிறது.

“ஒன்னாதார்க் கடந்து அடூஉம், உரவு நீர் மா கொன்ற,

வேன்வேலான் குன்றின் மேல் விளையாட்டும் விரும்பார் கொல்”

(கலி.27:)

பகைவரை வஞ்சனையில் கொல்லாமல் கடல் நடுவே மாமரமாகி மறைந்து நின்ற சூரபதுமனை வெற்றி வேலனாகிய முருகன் வேல் எறிந்து அரக்கனைக் கொன்றான் என்ற தொன்ம நிகழ்வை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் சூரபதுமனை முருகன் வதம் செய்தான் என்பதனை,

“ஈர் அணிக்கு ஏற்ற ஒடியாப் படிவத்துச்

சூர் கொன்ற செவ்வேலாற் பாடி, பலநாளும்,

ஆராக் கனை காமம் குன்றத்து நின்னொடு

மாரி இறுத்த கடவுளைக் கண்டாயோ”

(கலி.93:)

என்று மேற்கண்ட பாடல் அடிகள் உறுதிப்படுத்துகின்றன.

### மாயோன் அல்லது திருமால் தொன்மங்கள்

‘மா’ என்றால் கரிய, பெரிய என்று பொருள். ‘மால்’ என்றால் ‘மயக்கம் தருதல்’ என்று பொருள். இத்தகைய திருமால் குறித்த தொன்மத்தை,

“நனந்தலை உலகம் வளைஇ; நேமியொடு

வலம்பொறி பொறித்த மாதாங்கு தடக்கை

நீர்செல, நிமிர்த்த மாஅல் போல”

(முல்லை.: 1-3)

என்று மேற்குறிப்பிட்ட முல்லைப்பாட்டின் அடிகளானது பறைசாற்றுகின்றன. முல்லை நிலமாகிய காடுறை உலகம் மரங்கள் நிறைந்த பகுதி, மரங்கள் நிரம்ப இருப்பதால் மழை மேகங்கள் ஈர்க்கப் படுகின்றன. முல்லை நில மக்களுக்கு இயற்கை மழை பொழிந்து செல்வத்தைக் கொடுக்கும். மழையானது முல்லை நில மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அதே சமயம் மருட்சியையும் அளித்தது. எனவே இயற்கையே அங்கு தெய்வமாயிற்று.

முல்லைநில மக்கள் விரிச்சி கேட்கின்றனர். விரிச்சி கேட்டல் என்பதே தொன்மத்தின் ஒரு கூறாகும். இதனை

“அங்கடி மூதூர் மருங்கில் போகி,

யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு

நாழி கொண்ட, நறுவீ முல்லை

அருப்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது

பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்ப” (முல்லை. :7-11)

மேற்கண்ட பாடல்வழி இயற்கை எனும் தொன்மத்தை முல்லை நிலப்பாடல்கள் சங்க இலக்கியத்தில் முதன் முதலாகத் தோற்றுவித்தன என்பதனையும் அறிய முடிகிறது.

### கலித்தொகையில் திருமால்

திருமால் வழிபாட்டின் தொன்மைக்குக் கலித்தொகையும் சான்றாக அமைகிறது. இந்நூலில் திருமாலின் அவதாரமாகக் கருதப்படும் கண்ணனின் பாலசரித நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. கலித்தொகையில் உள்ள பாடல்களில் இத்தகைய குறிப்புகள் இடம் பெறுகின்றன.

“இகுளை !.....................

காயாம்பூங் கண்ணிப் பொதுவன் தகை கண்டை

வாய் பகுத்திட்டு, புடைத்த ஞான்று

இன்னன் சொல்

மாயோன் என்று உட்கிற்று, என் நெஞ்சு"

(கலி.103:)

தோழியே, காயாம்பூவாலான மாலைசூடி நிற்கும் இவன் அழகைப்பார்! பகைவர் ஏவிய குதிரை அரக்கனை அதன் வாயைப்பிளந்து கொன்றொழித்த அன்று, திருமால் இவனைப் போலவே தோன்றி னான் போலும் என்று எண்ணி நடுங்கு கிறது என் நெஞ்சு என்று தோழி தலைவியை நோக்கிக் கூறியது. இது தொல்காப்பியம் குறிப்பிட்டது போலத் திருமாலை 'மாயோன்' எனக் குறிப்பிடு கிறது.

சங்ககாலத்தில் தமிழர்கள் வழிபட்ட மாயோன் என்ற சொல் திருமாலைக் குறிப்பதாகும். இவர் முல்லைத் திணையின் அதிபதி என்பதனை தொல்காப்பியம்,

மாயோன் மேய காடுறை உலகமும்

(தொல். 951:1)

என்ற பாடல் அடி சுட்டிக் காட்டுகிறது. முல்லை நிலமாம் காடுறை உலகம் மரங்கள் நிறைந்த பகுதி. முல்லை நிலத் தெய்வமாக மாயோனை வழிபட்டதாகத் தொல் முதலிய பண்டைய இலக்கண, இலக்கியங்கள் குறிப்பிடுவதைக் காண முடிகிறது.

**மாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி அளத்தல்**

மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களில் வாமன அவதாரம் ஐந்தாவது அவதார மாகும். இந்த அவதாரம் திரேதாயுகத்தில் நடைபெற்றது என்று கூறுவர். மலையாள தேசத்தில் முப்பத்து முக்கோடி தேவர் களும் பொறாமை கொள்ளும் வகையில் நல்லாட்சி செய்தவன் மாபலி. தன்னை நாடி வருவோர்க்குக் கேட்டதை வாரி வழங்கி வந்தார். தேவர்கள் பொறாமைப் பட்டு தேவேந்திரனிடம் முறையிட, அவர் மகாவிஷ்ணுவிடம் கூறினார். உடனே விஷ்ணு குள்ளமான வாமன அவதாரம் எடுத்து மாபலியிடம் சென்று தானம் கேட்டார். விஷ்ணுவின் அவதாரத்தை உணர்ந்த சுக்கிராச்சாரியார் 'வாமனனாய் வந்திருக்கும் மகாவிஷ்ணுவிடம் எந்த வாக்கும் கொடுத்து விடாதே, அது உன் ஆட்சி அதிகாரத்திற்கு மட்டுமின்றி ஆயுளுக்கும் ஆபத்தாய் முடியும்;' என்று எச்சரித்தார்.

இதனைக் கேட்டு மாபலி சக்கரவர்த்தி 'பகவானே இறங்கி வருவது நான் செய்த பாக்கியம். எல்லோரும் கடவுளிடம் கேட்பார்கள் ஆனால் கடவுளே இறங்கி வந்து என்னிடம் கேட்கிறார். இது எனக்கு பெருமையே' என்று கூறினார். மாபலியிடம் வந்த வாமனன் தனக்கு மூன்றடி நிலம் வேண்டும் என்றார். உடனே மாபலி அவர் காலில் விழுந்து வணங்கி மூன்றடி நிலம் தானே தாரளமாய் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். உடனே மகாவிஷ்ணு ஓங்கி உலகளந்த உத்தமனாக விண்ணுக்கும் மண்ணுக்குமாக உயர்ந்து நின்றார். ஒரு பாதத்தை ஆகாயத்திலும், மற்றொரு பாதத்தை பூமியிலும் வைத்தார். 'மூன்றடி கொடுப்பதாகச் சொன்னாய் இரண்டு அடி அளந்து விட்டேன். மூன்றாவது அடிக்கு இடமில்லையே' என்று திருமால் கேட்க இதோ எடுத்துக் கொள்ளுங்கள் என்று தலையைக் காட்டினார் மாபலி. உடனே அவர் மாபலி தலையில் பாதத்தை வைத்து அழுத்தி பாதாளலோ கத்திற்கு அனுப்பி கொடை வள்ளலான மாபலியின் புகழ் என்றென்றும் நிலைத் திருக்க அருள் செய்தார். மேலும் மாபலிச் சக்கரவர்த்தி திருமாலிடம் ஒரு வேண்டு கோள் விடுத்தார். என்னால் என் நாட்டு மக்களைப் பிரிந்து இருக்க இயலாது. ஆகையால் ஆண்டுதோறும் ஒரு நாளில் அவர்களைச் சந்திக்க வரம் வேண்டும் என்றார். மாபலி கேட்ட வரத்தினைத் தந்து அருளினார் திருமால். இச்செய்தியி னைக் கலித்தொகை பாடலானது,

"ஞாலம் மூன்று அடித் தாய முதல்வற்கு

முதுமறைப்

பால்அன்ன மேனியான் அணிபெறத்தை இய

நிலநீர் உடைபோல" (கலி.124)

என்ற பாடல் அடிகள் மூலம் விளக்கு கிறது. மூன்று உலகங்களையும் தன் திருவடியினால் அளந்த முதல்வனாகிய திருமாலுக்கு மூத்தவன் என்ற முறையை உடையவனாகிய பலராமன் பால் போன்ற நிறமுடையவனாவான். திருமால் அழகுற அமைந்த நீலநிற ஆடையை அணிந்துள்ளான் என்ற தொன்மமானது திருமால் மூன்றடி அளந்த வரலாற்றினை எடுத்துரைக்கின்றது. மேலும்

"மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்

தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான் போந்து" (சிலம்பு.223)

எனும் சிலம்பின் பாடல் அடிகளானது மேற்குறிப்பிட்ட தொன்மத்தை விளக்குகிறது. மேலும் முல்லைப்பாட்டு அடியானது,

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு

வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை

நீர்செல நிமிர்ந்த மாஅல்போல்

(முல்லை. 1-3)

திருமால் திருவிக்கிரம கோலத்துடன் உயர்ந்து நின்ற வரலாற்றினை எடுத்துரைக் கின்றது. மேலும் திருவள்ளுவர் உலகப் பொதுமறையாம் திருக்குறளில் திருமால் உலகளந்த வரலாற்றினைக் குறிப்பிட்டு ள்ளார்.

"மடியிலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்

தாயது எல்லாம் ஒருங்கு" (குறள்.610)

மேற்க்குறிப்பிட்டுள்ள பாடல் அடிகள் மூலம் திருமால் உலகளந்த தொன்ம வரலாறு குறித்து அறிந்து கொள்ள முடிகிறது.

**கொற்றவை குறித்த தொன்மங்கள்**

கொற்றவை பாலைநிலத்திற்குரிய தெய்வ மாகத் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளாள். கொற்றவை குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகச் சில பழந் தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டாலும் பிற்காலத்தில் கொற்றவை பாலை நிலத்திற்குரிய தெய்வமாகவே பெரும் பாலும் கருதப்படுகிறாள்.

**தொடக்ககாலச் சான்றுகள்**

இன்று கிடைக்கக்கூடிய மிகப்பழமையான தமிழ் இலக்கண நூலான தொல்காப்பி யத்தின் பொருளதிகாரத்தில் 'கொற்றவை நிலை' எனும் ஒரு பிரிவு கூறப்பட்டுள்ளது. போருக்குச் செல்வோர் கொற்றவையின் பெருமைகளைக் கூறி அத்தெய்வத்தை வழிபட்டுச் செல்வது 'கொற்றவை நிலை' எனப்படுகிறது. கொற்றவை கானகத்தில் உறையும் மறவர்களுக்குத் தெய்வமாகக் கருதப்படுகிறாள். இதனை,

ஓங்குபுகழ்க் கான்அமர் செவ்வி(அகம்.345)

என்ற பாடல் அடியானது சுட்டுகின்றது.

தமிழ்க்கடவுள் என்று குறிப்பிடப்படும் முருகனைக் கொற்றவையின் மகன் என்று 'கொற்றவை சிறுவ' எனும் அடியும், 'பழையோள் குழவி' எனும் அடியும் குறிப்பிடுகிறது. மேலும் பெரும் பாணாற்றுப்படையில் சூரனைக் கொன்ற முருகனைப் பெற்ற வயிற்றினையும், பேய்களாடும் துணங்கைக் கூத்தாடும் அழகினையும் உடைய இறைவி என்றும் கொற்றவையைப் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. இவற்றில் இடம்பெறும் 'பழையோள்' எனும் சொல்லின் மூலம் கொற்றவை வழிபாட்டின் தொன்மத்தை அறிந்து கொள்ளமுடிகின்றது. கொற்றவை குறித்து நேரடியாகவும் மறைமுகமாகவும் பல குறிப்புகள் முந்தைய நூல்களில் காணப்பட்டாலும் சிலப்பதிகாரமே கொற்றவை குறித்து விரிவான பல தகவல்களைத் தருகிறது. சிலம்பின் மதுரைக் காண்டத்தில் காடுகாண் காதையில் கொற்றவைக்குக் கோயில்

இருந்த செய்தியினைக் குறிப்பிடுகின்றது. இதன் மூலம் கொற்றவை குறித்த தொன்மத்தை அறிந்து கொள்ள முடிகின்றது.

### கலியில் கொற்றி

கொற்றவையைக் கலித்தொகை 'கொற்றி' எனக் குறிப்பிடுகிறது. 'கொற்றியே ஒரு பேய். அவளுக்கே பேய் பிடித்து விட்டது என்று சொன்னால் யார் நம்புவார்கள்' என்று தலைவி தலைவனிடம் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

**“பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்
தொடித்தாங்கு
உருத்தல் நின் வஞ்சம் உரைத்து”** *(கலி.89)*

எனும் அடிகளில் பெரிய காட்டில் வாழும் கொற்றவைக்குப் பேய் நொடி சொல்வது போல் உன் வஞ்சக வார்த்தை களைச் சொல்லி என்னை வருத்தாதே எனத் தலைவி குறிப்பிடுவதன் மூலம் கொற்றவை குறித்த தொன்மத்தை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

### திருமகள் குறித்த தொன்மம்

'திரு' என்ற சொல் சங்க இலக்கியங் களில் பரவலாய்க் காணப்படும் சொல் லாகும். இச்சொல்லானது 'செல்வம், அழகு, சிறப்பு. தெய்வத்தன்மை, பேறு' என்ற பொருளிலும் 'திருமகள்' என்ற பொருளிலும் வருவதைக் காணலாம். திருமகள் திருமாலோடு இணைத்துப் பேசப்பட்டுள்ளாள்.

**மாயவன் மார்பில் திருப்போல்** *(கலி.145)*

என்ற அடியில் திருமால் மார்பில் உறையக்கூடிய திருமகள் என்று குறிப்பிடுவதன் மூலம் திருமகள் குறித்த தொன்மத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

### முடிவுரை

சிவன் முப்புரங்களை எரித்த வரலாறு பற்றியும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றுமே முப்புரங்கள் என்ற செய்தியையும், உலக உயிர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த கொடிய அரக்கன் சூரபதுமனை முருகப் பெருமான் இருகூறாகப் பிளந்து ஒரு பகுதியை மயில்வாகனமாகவும், மற்றொரு பகுதியைச் சேவற் கொடியாகவும் மாற்றினார் என்ற செய்தியினையும் அறிய முடிகின்றது. மகாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்து மாபலி சக்கரவர்த்தி யின் ஆணவத்தை அழித்த திருமாலின் தொன்மம் பற்றியும் கொற்றவை பற்றிய தொன்மம் பற்றியும் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

### துணைநூற்பட்டியல்

1. விசுவநாதன், கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 600 098.
2. கருணாநிதி.மு, திருக்குறள், திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயண சாலை, தி.நகர், சென்னை – 17.
3. சுப்பிரமணியன் ச.வே, பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, வர்த்தமானன் பதிப்பகம், இராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை – 17
4. தமிழண்ணல், தொல்காப்பியம், செல்லப்பா பதிப்பகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை – 625 001.
5. பரிமணம்.அ.மா., பதிற்றுப்பத்து, வர்த்தமானன் பதிப்பகம், இராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை – 17.
6. புலியூர் கேசிகன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை – 14.
7. மாணிக்கம்.அ, அற்புதத் திருவந்தாதி, மணிவாசகர் பதிப்பகம், 31 – சிங்கர் தெரு, சென்னை – 600 108.
8. மாணிக்கவாசகன்.ஞா, திருமந்திரம், உமா பதிப்பகம், 18, பவளக்காரர் தெரு, மண்ணடி, சென்னை – 600 108.